வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 398 of 2021

வழக்கு சாட்சி – PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கனகராஜ் | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | அன்பழகன் | தொழில் | : | உதவி மேலாளர் |
| கிராமம் | : | பேங்க் ஆப் இந்தியா, கணபதிபாளையம் கிளை | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 30 |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

முதல் விசாரணை: நாள்: 03.03.2023

1. நான் தற்போது பேங்க் ஆப் இந்தியா, கணபதிபாளையம் கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அழைப்பாணையில் கேட்கப்பட்ட கணக்கு விவரங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். வங்கி கணக்கு எண். 82123011000326 என்ற கணக்கை யாருடைய பெயரில் உள்ளது என்றால் ஸ்ரீ ஸ்ரீனிவாசா பேசன்ஸ் என்ற பெயரில் உள்ளது. 05.01.2021ம் தேதி காசோலை எண். 265891 மற்றும் 002279 ஆகிய எண்கள் கொண்ட பாரத ஸ்டேட் பேங்கின் காசோலைகள் பணமாக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரிதான். தாக்கல் செய்யப்பட்டுள்ளது மேற்படி இரண்டு காசோலைகளும் பணமாக்கப் பட்டதா என்றால் போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டது. அந்த இரண்டு காசோலைகளும் யாரால் வழங்கப் பட்டது என்றால் சிபிசி பேஷன்ஸ் ஏசியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. நான் எங்களது வங்கியில் உள்ள வங்கி கணக்கு எண். 82123011000326ன் கணக்கு பட்டியல் ம.சா.ஆ. 8 ஆகும். ம.சா.ஆ.8 ஆவணத்தில் 13வது பக்கத்தில் காசோலைகள் திருப்பப் பட்டதற்கான பதிவு ஏற்படுத்தப் பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் எந்தவித குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டதால் குறுக்குவிசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை.**

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.03.03 20:53:33 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்